**<u>சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

## <u>OS.No.13/2023</u>

தேதி: 08.06.2026

பெயர் : ரகுபதி (பி.வா.சா.1) த/பெ: ரெங்கசாமி

<u>குறுக்குவிசாரணை</u>

1. எனக்கு எழுத படிக்க தெரியும். நான் கிரஸரில் கூலி வேலை செய்கிறேன். என் அப்பா ரெங்கசாமி ரெட்டியாருக்கு 3 மகன்கள், 2 மகள்கள் ஆவார்கள். வாதிகள் வழக்கில் தெரிவித்துள்ள தரப்பினர்களின் உறவுமுறை சரியா என்றால் சரிதான். வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். வாதிகள் தாவா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து வீடு என்றால் சரிதான். தாவா சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து என் அப்பா பெயரில் இருந்தது என்றால் சரிதான். செங்காட்டுப்பட்டியில் எனக்கு உறவினர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. என்னுடைய ரெட்டியார் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் செங்காட்டுப்பட்டியில் உள்ளார்கள் என்றால் சரிதான். அதில் என்னுடைய உறவினர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆரம்பத்தில் என் அப்பாவுக்கு இனாம்சாசனமாக வந்த சொத்து என்றால் சரிதான். தாவா வீட்டில் தான் என் அப்பாவின் 5 பிள்ளைகளுக்கும் திருமணம் நடந்தது என்றால் இல்லை 4 பிள்ளைகளுக்கு தான் நடந்தது. உண்மையாக 5 பிள்ளைகளுக்கும் தாவா வீட்டில் தான் திருமணம் நடைபெற்றது எனவும் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

2. என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்திற்கு அனைவரும் வந்து சென்றார்கள் என்றால் இல்லை. என் அப்பா எல்லாருடைய வீட்டிற்கும் சென்று நல்ல

உறவுமுறையில் இருந்தார் என்றால் இல்லை. நான் என் அண்ணன் தம்பி வீடுகளுக்கு நல்லது கெட்டதுக்கு செல்வேன், நான் அண்ணன் தம்பி வீட்டிற்கு சென்று வந்ததால் சுமூகமான உறவுமுறையில் இருந்தேன் என்றால் தம்பி இறந்துவிட்டார். வா.சா.ஆ.23 புகைப்படத்தில் உள்ள வீடு செங்காட்டுப்பட்டி வீடு என்றால் சரிதான். புகைப்படத்தில் மேலே நின்று கொண்டிருக்கும் நபர் 1ம் பிரதிவாதி என் அண்ணனும் அவரது மனைவியும், அமர்ந்துள்ள நபர் என் தந்தையும் தாயும் ஆவார்கள் என்றால் சரிதோன். என் அண்ணனுக்கு 1984ல் திருமணம் நடைபெற்று 1991 வரை என் அண்ணன் அவரது மனைவியுடன் மேற்படி வீட்டில் தான் குடியிருந்தார் எனவும் அப்போது தான் மேற்படி புகைப்படம் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25 புகைப்படத்தில் நானும், என் அப்பா, என் மனைவி, குலோத்துங்கன், சகோதரி ஆகியோர் உள்ள குடும்ப புகைப்படம் கோயம்புத்தூரில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் 2ம் வாதியின் திருமணத்தின் போது எடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் அக்கா பிரேமாவின் மகனுக்கு தான் என் மகளை திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.25 புகைப்படத்தில் உள்ள 3ம் வாதி பிரீத்தா என்பவரை மற்றொரு சகோதரி மணிமேகலை என்பவரின் மகன் சதிஸ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா காலத்திலிருந்து தாவா சொத்தில் என் அப்பாவின் வாரிசுகள் ஒன்றாக தான் வந்து போக இருந்து அனுபவம் செய்து வந்தார்கள் எனவும் வழக்கிற்காக இல்லை என மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

3. 2021ல் என் அப்பா இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய ஈமகாரியங்களை அனைவரும் சேர்ந்து செய்தோம் என்றால் இல்லை நான் மட்டும் தான் செய்தேன். என் அப்பா இறந்த போது குலோத்துங்கன் குடும்பத்தார் வந்தார்கள் என்றால் சரிதான். என் அப்பா இறப்பிற்கு ஈமகாரியங்களை என் அண்ணன் குலோத்துங்கன் குடும்பமும் சேர்ந்து தான் செலவுகள் செய்தார்கள் எனவும் இல்லை என்று நான் வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் குலோத்துங்கன் செங்காட்டுப்பட்டியில்

குடியிருந்ததற்கு வங்கி கணக்கு புத்தகம் வைத்துள்ளார் எனவும் நான் பொய்யாக அவர் அங்கு இல்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் கோயம்புத்தூரில் இருந்த போது நானும் என் அப்பாவும் அவருக்கு கடிதம் அனுப்பும் பழக்கம் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.20 மற்றும் 24 நான் எழுதிய கடிதம் என்றால் இல்லை. மேற்படி கடிதங்கள் நான் எழுதிய கடிதம் வழக்கிற்காக இல்லை என மறுக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கடிதங்கள் என் அப்பா எழுதிய கடிதங்களா என்றால் கையெழுத்து என்னுடைய அப்பா கையெழுத்து அதில் எழுதியுள்ள வாசகங்கள் அவர் கையெழுத்து அல்ல வேறு யாரையாவது வைத்து எழுதியிருப்பார்.

4. தாவா சொத்து குறித்து உரிமையை குலோத்துங்கன் 1982ல் விடுதலை செய்து கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். அதே சொத்துக்கு நானும் 1985ல் விடுதலைப்பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. துறையூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.94/1985ன் படி விடுதலை பத்திரம் பொது பாகத்தை பொறுத்து நான் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. மேற்படி விடுதலை பத்திரங்களை நானும் என் அண்ணனும் 2002ல் பத்திர எண்.110/2002 என்று ஒரே நாளில் ரத்து செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து அபகரிக்க வேண்டி நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் நான் எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் என் அம்மாவும் என் அண்ணனும் சாட்சி கையெழுத்து அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் ரத்து பத்திரம் எழுதி கொடுத்த அதே நாளில் என் அண்ணன் குலோத்துங்கனும் பாக விடுதலை ரத்து பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் எனவும் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பத்திரம் துறையூர் சார்பதிவாளர் அலுவலக எண்.111/2002 எனவும் அதில் என் அம்மாவும் நானும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

5. என் அப்பா 2021ல் இறந்த போது குலோத்துங்கன் குடும்பம் கோயம்புத்தூரில் இருந்து வந்து தாவா சொத்து பொது சொத்து என்பதால் பாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்டார்கள் எனவும், அதனால் தான் எனக்கும் அவர்களுக்கும் சண்டை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன் பிறகு தான் முழு சொத்தையும் நானே அனுபவத்தி கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் என் மகள்களுக்கு பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் 2022ல் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.10 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் 2வது பக்கத்தில் அடியில் கண்ட சொத்து எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தானம் எழுதி கொடுத்த சொத்து தான் தாவா சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தில் அதிலுள்ள சொத்து எனக்கு உயில் மூலமாக பாத்தியப்பட்ட சொத்து என கூறவில்லை என்றால் சரிதான். என் மகள்களுக்கு மோசடியாக நான் தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த பிறகு வாதிகள் எனக்கு வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு 20.09.2022ல் அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதற்கு நான் 16.10.2022ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு ஒருமாத காலத்திற்குள் பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தை எனக்கு வேண்டப்பட்டவர்களை வைத்து தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இறப்பதற்கு 4 நாட்களுக்கு முன்பு உயில் ஆவணத்தை என்னிடம் கொடுத்தார்.

6. என் மகள்களுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதும்போது உயில் ஆவணம் இருந்திருந்தால் அதுகுறித்து அதில் கூறியிருப்பேன் எனவும் உயில் ஆவணம் தயாரிக்கப்பட்டதால் தான் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் அதுபற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணம் எழுதப்பட்ட போது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பா ரெங்கசாமி என கையெழுத்து போடுவாரா என்றால் ரெங்கசாமி எனவும் ரெங்கசாமிரெட்டியார் எனவும் கையெழுத்து போடுவார். என் அப்பா 2005ல்

நடராஜன் என்பவருக்கு ஒரு சொத்தை விற்றார் என்றால் சரிதான். வா.சா.ஆ.26ல் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து என்றால் சரிதான். அதில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் சாட்சி கையெழுத்து குலோத்துங்கனும் அவரது மகனும் பிரதீப் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. விற்ற பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டிருக்கலாம். 1982ல் குலோத்துங்கன் சொத்துகளை விற்றுவிட்டு சென்றுவிட்டார் என நான் கூறுவது பொய் எனவும் அவர் செல்லவில்லை எனவும் அதனால் தான் அவர் பொது குடும்ப சொத்துகளை விற்கும் போது வந்து தன் மகனுடன் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரியல்ல. குலோத்துங்கன் துறையூர் பிரிவு ரோட்டில் கடை வைத்திருந்தார் என்னை வந்து பார்த்து செல்வார்.

7. வா.சா.ஆ.26 ரெங்கசாமியின் கையெழுத்து ச உடன் ா சேர்ந்து எல்லா பக்கத்திலும் உள்ளது என்றால் ஒரு சில பக்கங்களில் பிரிந்து வருகிறது. பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் ரெங்கசாமியின் கையெத்து ச உடன் ா ஒரு இடத்திலும் சேர்ந்து இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தில் உள்ள ரெங்கசாமியின் கையெழுத்து அவருடைய அசல் கையெழுத்துக்கு மாறுபட்டு உள்ளது எனவும் நான் மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பா உயில் பத்திரத்தை எனக்கு கொடுத்த பிறகு நான் வாங்கி படித்து பார்த்தேன் என்றால் சரிதான். உயில் பத்திரத்தில் உள்ள சாட்சிகள் எந்த ஊர் என்றால் பெரம்பலூர் மாவட்டம் பாடாலூரை சேர்ந்தவர்கள். உயில் சாட்சிகள் என் மனைவியின் நெருங்கிய உறவினர்கள் என்றால் இல்லை. செங்காட்டுப்பட்டிக்கும் பாடாலூருக்கும் 40 கி.மீ தூரம் இருக்கும். பத்திரம் தயாரித்தவர் கரட்டாம்பட்டியை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. துறையூரிலிருந்து கரட்டாம்பட்டி 5-6 கி.மீ தூரத்தில் உள்ளது. உயில் பத்திரத்தில் உள்ள சாட்சிகள் எனக்கு உறவினர்கள் எனவும் தயாரித்தவர் எனக்கு வேண்டியவர் எனவும் வழக்கிற்காக உயில் ஆவணத்தை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல்

செய்துள்ள மறுப்பு பதிலுரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் உயில் பத்திரம் மோசடியானது என வாதிகள் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். உயிலில் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து என நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 17.06.2026 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.

/ உண்மை நகல்/

(ஒம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.